பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

14 04 2025 **MONDAY** 6 30 **PM**

வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மின் உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்

2. புதிய குற்றவியல் சட்டங்கள் 21ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய சீர்திருத்த நடவடிக்கை என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. சர்ச்சைக்குரிய கருத்தை தெரிவித்த மாநில அமைச்சர் திரு. பொன்முடிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தயங்குவது ஏன் என்று பிஜேபி வினவியுள்ளது.

4. தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மகளிர் ஹாக்கி போட்டித் தொடரில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

மின் உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஹரியானா மாநிலம், யமுனா நகரில பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

நாட்டின் வளர்ச்சிக்கு மின்பற்றாக்குறை தடையாக இருக்கக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சூரியமின்சக்தி குடியிருப்புத் திட்டம், மின் கட்டணங்களை பூஜ்யமாக குறைக்க உதவிடும் என்றும் அவர் கூறினார்.

பாரத ரத்னா அம்பேத்கரின் கனவை நனவாக்கும் வகையில் தமது அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சமூகநீதியை உறுதி செய்வதற்காக அம்பேத்கர் காட்டிய பாதையில் மத்திய அரசு பணியாற்றி வருவதாகவும் பிரதமர் கூறினார்.

<<<<<<>>>>>>

புதிய குற்றவியல் சட்டங்கள் 21ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய சீர்திருத்த நடவடிக்கை என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் தடய அறிவியல் உச்சிமாநாட்டில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

குற்றவழக்குகளுக்கு தீர்வு காண்பதில் தடய அறிவியல் முக்கியப் பங்கு வகிப்பதாக அவர் தெரிவித்தார்.

குறிப்பிட்ட காலத்திற்குள் வழக்குகளுக்கு தீர்வு காணப்பட வேண்டியது அவசியம் என்றும் திரு. அமித் ஷா கூறினார்.

<<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் முதலிடத்தில் உள்ளதாக சட்டப்பேரவை துணைத்தலைவர் திரு. பிச்சாண்டி கூறியுள்ளார்.

இன்று திருவண்ணாமலையில் அம்பேத்கர் பிறந்த தினத்தை ஒட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று, அரசின் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி அவர் பேசினார்.

தமிழக அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் மூலம் அனைத்து தரப்பினரும் பயனடைந்து வருவதாகவும் திரு. பிச்சாண்டி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மாநில அமைச்சர் திரு. பொன்முடி தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்திற்காக அவர் மீது நடவடிக்கை எடுக்க முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தயங்குவது ஏன் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வினவியுள்ளார்.

இன்று நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திரு. பொன்முடியின் கருத்து அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிரானது என்று குறிப்பிட்டுள்ளார்.

சட்டப்பேரவை தேர்தலில் இப்பிரச்சினை எதிரொலிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

அஇஅதிமுக – பிஜேபி இடையேயான கூட்டணி எவ்வித இழுபறியும் இல்லாமல் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் கூறினார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் கிழக்குக் கடற்கரை பகுதியில் மீன்பிடி தடை காலம் இன்று நள்ளிரவு தொடங்குகிறது.

ஜூன் மாதம் 14ஆம் தேதிவரை இந்த தடை செயல்பாட்டில் இருக்கும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - கார்த்திகேயன் 46 செகண்ட்ஸ்)

<<<<<<>>>>>>

விருதுநகர் மாவட்டத்தில் மின்சாரம் தாக்கியதில் 2 பெண்கள் உட்பட 3 பேர் உயிரிழந்தனர், 2 பேர் காயமடைந்தனர்.

கோவில் திருவிழாவிற்காக மைக்செட் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது, இந்த விபத்து நேரிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - கமலக்கண்ணன் 33 செகண்ட்ஸ்)

<<<<<<>>>>>>

பெரம்பலூர் மாவட்டம், பூலாம்பாடியில் வருடாந்திர ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

350-க்கும் மேற்பட்ட மாடுபிடி வீரர்கள் இதில் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - செல்வராஜ் 35 செகண்ட்ஸ்)

<<<<<<>>>>>>

உலகப் புகழ் பெற்ற சுற்றுலா தலமான உதகை தாவரவியல் பூங்காவிற்கு செல்லும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

தொடர்விடுமுறை காரணமாக ஏராளமான சுற்றுலாப் பயணிகள் இப்பூங்காவை பார்வையிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சரவணன் 40 செகண்ட்ஸ்)

<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், ஒரு சில பகுதிகளில் கோடை வெயிலின் தாக்கம் மேலும் அதிகரிக்கக்கூடும் என்றார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 27 செகண்ட்ஸ்)

<<<<<<>>>>>>

மாவட்டச் செய்திகள்

அம்பேத்கரின் பிறந்த தினத்தை ஒட்டி, மதுரையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநில அமைச்சர்கள் திரு. மூர்த்தி, திரு. பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் பங்கேற்று, அரசின் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினர்.

<<<<<<>>>>>>

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அருகே சிறப்பு தூர்வாரும் திட்டப் பணிகளை மாநில அமைச்சர் திரு. சிவசங்கர் தொடங்கி வைத்தார்.

<<<<<<>>>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசின் நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு. பிரசாந்த் பயனாளிகளுக்கு இன்று வழங்கினார்.

<<<<<<>>>>>>

தொடர் விடுமுறையை முன்னிட்டு, தருமபுரி மாவட்டம், ஒகேனக்கலில் சுற்றுலா பயணிகள் குவிந்துள்ளனர்.

<<<<<<>>>>>>

திருவாரூர் மாவட்டம், வடுவூர் கோதண்டராமர் கோவில் தேரோட்டம் இன்று விமரிசையாக நடைபெற்றது.

<<<<<<>>>>>>

வேலூர் மாவட்டத்தில் மத்திய அரசின் பயிர் காப்பீட்டு திட்டத்தின் மூலம் கடந்த ஆண்டில் 15 ஆயிரம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

<<<<<<>>>>>>

விளையாட்டுச் செய்திகள்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மகளிர் ஹாக்கி போட்டித் தொடரில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**Salima Tete** தலைமையிலான இந்த அணியில் ஷர்மிளா தேவி, பூஜா யாதவ் உட்பட 26 பேர் இடம்பெற்றுள்ளனர்.

ஆஸ்திரேலியாவில் வரும் 21ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 5ஆம் தேதிவரை ஐந்து போட்டிகள் நடைபெறவுள்ளன.

முதலில், ஆஸ்திரேலியா-ஏ அணிக்கு எதிராக 2 போட்டிகளிலும், இதனைத் தொடர்ந்து ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான 3 போட்டிகளிலும் இந்தியா பங்கேற்கிறது.

**<<<<<<>>>>>>**

**Abidjan** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Adil Kalyanpur** பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<<>>>>>>**

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி இன்று லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

**<<<<<<>>>>>>**

கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிக்கான இலச்சினையை பீகார் முதலமைச்சர் திரு. நிதிஷ்குமாரும், மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியாவும் இன்று பாட்னாவில் வெளியிட்டனர்.

**<<<<<<END>>>>>>**